செ.வெ.எண். 15 நாள்.08.01.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் வகையில் கதர் மற்றும் கிராம பொருட்கள் விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் வகையில் கதர் மற்றும் கிராம பொருட்கள் விற்பனை துவக்க நிகழ்ச்சி இன்று (08.01.2018) நடைபெற்றது. கதர் மற்றும் கிராம பொருட்கள் விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அரசு அலுவலர்கள் தவணை அடிப்படையில் கதர் பொருட்களை வாங்கும் வகையில் கதர் மற்றும் கிராமிய பொருட்கள் விற்பனை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், பேரூராட்சி அலுவலகங்கள் உள்ளிட்ட பகுதிகளிலும் தற்காலிக கதர் மற்றும் கிராமிய பொருட்கள் விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. கதர் மற்றும் பாலியஸ்டர் ரகங்களுக்கு 30 சதவீதமும், உல்லன் ரகங்களுக்கு 20 சதவீதமும் சிறப்பு தள்ளுபடி செய்யப்படுகிறது. அரசு பணியாளர்களுக்கு மாத ஊதியத்தில் 10 சம தவணைகளில் பெற்றிடும் வகையில் கடன் அடிப்படையில் கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு 2017–18ம் ஆண்டில் கதர் விற்பனை குறியீடாக ரூ.102.70 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டதில், இதுவரை ரூ.71 இலட்சம் விற்பனை எய்தப்பட்டுள்ளது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் போக்குவரத்துக் கழக ஊழியர்களும், பொதுமக்களும் கதர் மற்றும் கிராமிய பொருட்களை தள்ளுபடி விலையில் கொள்முதல் செய்து பயன்பெற வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, கதர் கிராம தொழில்கள் உதவி இயக்குநர் திரு.சுரேஷ், கதர் அலுவலக கண்காணிப்பாளர் திரு.செந்தில்குமார், திருநெல்வேலி கதர் அங்காடி மேலாளர் திரு.ராமகிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.